குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.54/2012

அ.சா.9

2024–ம் ஆண்டு அக்டோபர் 22–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 09–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேஷ் | ஜாதி | |
| தந்தை பெயர் | பழனிச்சாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.23 மணி,

Accused Sakthivel absent. Petition U/s.317 Cr.P.C filed and allowed. Advocate Mr.Thiyagarajan present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் டால்மியா போர்டில் குடியிருந்து, டீ மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு, டால்மியா போர்டு ஸ்டாப் எதிரே சேலம் – ஓமலூர் மெயின் ரோட்டில் ஒரு விபத்து நடந்தது. விபத்து நடந்த மறுநாள் போலிசார் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு, விசாரணை செய்தார்கள். என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நானும், மாதையன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. (**அந்த கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

2. நான் சம்பவத்தின்போது டீக்கடையில் டீ மாஸ்டராக வேலை பார்த்துக்கொண்டிருந்தேன் என்றால் சரி. போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கிய போது, எனது முகவரியை விசாரித்து கையெழுத்து பெற்றார்கள். நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்றால், சம்பவம் நடந்த இடத்தின் குறியீடு செய்து,

எழுதியிருந்தார்கள். நான் பார்வை மகஜரை படித்துப் பார்த்தேனா என்றால், படித்துக் காட்டினார்கள். என்னிடம் எழுதப்படாத வெள்ளைத்தாளில் தான் கையெழுத்து வாங்கினார்கள் என்றால், நான் டீக்கடையில் வேலை செய்து கொண்டிருக்கும்போது கையெழுத்து வாங்கினார்கள் என்றால், எனது டீக்கடைக்கு முன்னால் வைத்து கையெழுத்து வாங்கினார்கள். எழுதிய தாளில் தான் கையெழுத்து வாங்கினார்கள்.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.30 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.